செ.வெ.எண்: 20 நாள்:08.08.2016

# பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடிக்குத் தயாராகும் இத்தருணத்தில் விவசாயிகள் விவசாயத்திற்குப் பயன்படுத்தும் மிக முக்கிய இடுபொருட்களில் ஒன்றான உரங்களை விற்பனை செய்யும் உர விற்பனையாளர்கள் உரக்கட்டுப்பாடு ஆணை 1985- சட்ட விதிமுறைகளை விடுபாடின்றி கடைபிடிக்க வேண்டும் என்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்

இது குறித்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது பயிர் சாகுபடியில் பெரும்பங்கு வகிக்கும் இராசயன உரங்கள் உர விற்பனை உரிமம் பெற்ற கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், தனியார் விற்பனை நிலையங்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. உர உற்பத்தி மற்றும் உர விநியோகம் உரக்கட்டுப்பாடு ஆணை1985, அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955 மற்றும் உர நகர்வு ஆணை 1972-ஆகிய ஆணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி நிர்வகிக்கப்படுகிறது.

விற்பனை உரிமங்கள் மொத்த விற்பனை, சில்லரை விற்பனை இரு பிரிவுகளில் வழங்கப்படுகிறது. உர விற்பனை உரிமம் இல்லாத உர விற்பனை சட்டப்படி குற்றமாகும். உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து உரங்களைப் பெற்று சில்லரை விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்வது மொத்த விற்பனையாகும். மொத்த விற்பனை உரிமம் பெற்றவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் நேரடியாக விவசாயிகளுக்கு விற்பனை செய்திட அனுமதி கிடையாது.

மொத்த விற்பனையாளர்கள் அல்லது உர நிறுவனங்களிடமிருந்து உரங்களைப் பெற்று விவசாயிகளுக்கு விற்பனை செய்வது சில்லரை விற்பனையாகும். சில்லரை விற்பனை உரிமம் பெற்றவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் இதர சில்லரை விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கு அனுமதி கிடையாது. விவசாயிகளுக்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.

உர விற்பனை உரிமம் இல்லாமல் உரம் விற்பனை செய்யக் கூடாது. உர விற்பனை உரிமம் அனைவரது பார்வையில் தெளிவாக படும்படி விற்பனை நிலையத்தில் வைக்க வேண்டும்.

ஒவ்வொரு விற்பனை நிலையத்திலும் உரங்களின் இருப்பு, விலை விபரப்பலகை கண்டிப்பாக வைத்திருக்க வேண்டும். விற்பனை செய்யப்படும் அனைத்து உரங்களின் இருப்பு, விற்பனை விலை ஆகியவற்றை தவறாது ஒவ்வொரு நாளும் எழுதி விவசாயிகளின் பார்வையில் படும்படி விற்பனை நிலையத்தின் முன் வைக்க வேண்டும்.

உர மூட்டையில் அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச விற்பனை விலைக்கு (MRP) மிகாமல் விற்பனை செய்ய வேண்டும். உரிமத்தில் அனுமதிக்கப்பட்ட "O" படிவங்கள் உள்ள நிறுவனங்கள்/ மொத்த விற்பனையாளர்களிடம் மட்டுமே கொள்முதல் செய்ய வேண்டும். கொள்முதல் செய்த ஒவ்வொரு உரத்திற்கும் கொள்முதல் பட்டியல் (Invoice) பெற்று இருப்புப் பதிவேட்டில் பதிவுசெய்ய வேண்டும். உரங்களுக்கான கொள்முதல் பட்டியல்களைத் தனிக்கோப்பில் பராமரிக்க வேண்டும்

ஒவ்வொரு உர விற்பனை நிலையத்திலும் உரத்திற்கு மட்டும் தனியாக ஒரு இருப்புப் பதிவேடு படிவம் "N" பராமரிக்க வேண்டும். ஒரு உரத்திற்கு ஒரு பக்கம் என்ற அடிப்படையில் இருப்புப் பதிவேட்டில் பக்கம் ஒதுக்கி பதிவு செய்ய வேண்டும். மேலும் மொத்த விற்பனை மற்றும் சில்லரை விற்பனைக்கு தனித்தனி இருப்புப்பதிவேடு பராமரிக்க வேண்டும்.

ஒவ்வொரு விற்பனைக்கும் தவறாது விற்பனைப்பட்டியல் (ரசீது) வழங்க வேண்டும். விற்பனை ரசீதுகளில் விற்பனை நிலையத்தின் பெயர், உரத்தின் பெயர், உர விற்பனை உரிம எண், விற்பனைப்பட்டியல் எண் முதலியன அச்சிடப்பட்டிருக்க வேண்டும். விற்பனைப் பட்டியல(பில்) புத்தகம் "M" படிவத்தில் பராமரிக்க வேண்டும்.

உர விற்பனைப் பட்டியலில் தேதி, விவசாயியின் பெயர் மற்றும் முகவரி, விற்பனையாளர் கையொப்பம் மற்றும் விவசாயி கையொப்பம் பெறப்பட வேண்டும். விற்பனை உரிமம், இருப்புப்பதிவேடு, கொள்முதல் பட்டியல், விற்பனைபட்டியல்(பில்) புத்தகம் முதலியவற்றில் செய்ய வேண்டிய பதிவுகளை அவ்வப்போது பதிவு செய்து ஆய்வுக்கு வரும் அலுவலர்களிடம் காண்பித்தல் வேண்டும்.

கைபேசி மூலம் உரங்கள் கண்காணிப்பு முறையில் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லரை விற்பனையாளர்கள் பதிவு செய்து தினந்தோறும் உரங்கள் இருப்பு விவரங்களை பதிவு செய்திட வேண்டும்.

ஒவ்வொரு உர விற்பனையாளரும் தங்களின் விற்பனை நிறுவனத்தின் உரங்களின் கொள்முதல் மற்றும் விற்பனை தொடர்பான மாதாந்திர அறிக்கையினை பிரதிமாதம் 20-ஆம் தேதிக்குள் தவறாது அனுப்பிட வேண்டும்.

மேலும் மண் பரிசோதனை முடிவுகள் மற்றும் பொதுப்பரிந்துரைப்படி விவசாயிகளுக்கு உரங்களை விற்பனை செய்யுமாறு மாவட்ட ஆட்சி தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**